# ஆண்டவர் இயேசுவின் உயிர்ப்புப் பெருவிழா

# திருவழிபாடு ஆண்டு - B

# 2021-04-04

***இன்றைய வாசகங்கள்:***

*இறைவாக்கினர் திருத்தூதர் பணிகள் நூலிலிருந்து வாசகம்* 10:34, 37-43 ,

*திருப்பாடல்* 118:1-2, 16-17, 22-23,

*திருத்தூதர் பவுல் கொலோசையருக்கு எழுதிய திருமுகத்திலிருந்து வாசகம்* 3:1-4,

+*யோவான் எழுதிய நற்செய்தியிலிருந்து வாசகம்* 20: 1-9

## ***திருப்பலி முன்னுரை***

*ஆண்டவர் தோற்றுவித்த வெற்றியின் நாள் இதுவே : இன்று அக்களிப்போம். அகமகிழ்வோம்.*

*அன்புமிக்க சகோதர சகோதரிகளே! இயேசுவே ஆண்டவர் என்னும் இனிய நாமத்தில் நல் வாழ்த்துக்கள். இன்று உயிர்ப்புப் பெருவிழா. இயேசு சாவை வென்று மகிமைமிக்க கடவுளாய் உயிர்த்தெழுந்த நாள். பாவம், தீமை, அடக்குமுறை, அநீதி, ஆதிக்கம், எதுவும் வெற்றி பெறாது என்பதை இயேசு உலகிற்கு உணர்த்திய உன்னத நாள். நமக்கு வாழ்வு உண்டு, விடுதலை உண்டு, இறையன்பிலிருந்து எம்மை எதுவும் பிரிக்க முடியாது என்பதை நமக்கு உறுதிப்படுத்திய நாள். என்னைப் பின் செல்பவன் இருளில் நடவான்: உயிரின் ஒளியைக் கொண்டிருப்பான் என்னும் உண்மையை உணர்ந்து வாழ நம்மை அழைக்கும் நாள். இது மகிழ்ச்சியின் நாள், மன நிறைவு தரும் நாள், சோகங்களைச் சுகமாக்கும் நாள்.*

*எனவே உலகெங்கும் நின்று நிலவும் அடக்குமுறைகள் அழியவும், விடுதலை வாழ்வு நிலைபெறவும் இறையருள் வேண்டித் தொடரும் திருப்பலியில் இணைவோம்.*

www.tamilcatholicnews.com

# விசுவாசிகள் மன்றாட்டுகள்:

*விண்ணுலகில் வீற்றிருப்பவரே! உம்மை நோக்கியே என் கண்களை உயர்த்தியுள்ளேன்.*

*பதில் : ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

**வெற்றி வேந்தராம் இறைவா,**

*திருச்சபையின் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார், பொதுநிலையினர் அனைவரும் உம் திருமகனின் உன்னத தூதுவர்களாக செயலாற்ற உதவுமாறு, உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***ஒருவர் ஒருவரின் சுமைகளைத் தாங்கிக் கொள்ள சமூக உறவை உருவாக்கிய அன்புத் தந்தையே இறைவா!***

*எமது சமூகத்திற்காக உம்மிடம் இரந்து வருகின்றோம். இன்றைய நாட்களில் சமூக உறவுக்கும் ஒற்றுமைக்கும் மகிழ்ச்சிக்கும் தடையாக இருக்கும் அனைத்துத் தீமைகளையும் உமது இரக்கத்தால் தகர்த்தெறிந்து நாம் அனைவரும் ஒரே உள்ளமும் , ஒரே மனமும் உடையவர்களாச் செயற்பட்டு இறையரசின் கருவிகளாகவும் , சமாதானத்தின் தூதுவர்களாகவும் , உமது சாட்சிகளாகவும் செயற்பட வரமருள வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

**விண்ணில் வாழ்பவராம் இறைவா,**

*எங்கள் குடும்பத்தினர்கள் அனைவரும் சாட்சிகளாக வார்த்தையால் மட்டுமல்ல, வாழ்க்கை மூலமாகவும் வெளிப்படுத்தவும், இயேசுவின் சிந்தனைகள், பணிவாழ்வு, இறுதி இலக்கு இவற்றை எமதாக்கி இருக்குமிடத்தில் விண்ணகத்தை உருவாக்கத் தேவையான நல்வரங்களைத் தர வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***கருணையும் இரக்கமும் நிறைந்த தந்தையே!***

*நோயினால் வாடுவோர், தனிமையில் இருப்போர், கவலையினாலும் துன்பங்களினாலும் கலங்குவோர், தேவையில் உழல்வோர், அடிமைத்தனத்துள் வாழ்வோர் அனைவரையும் உமது கருணையினாலும் , இரக்கத்தினாலும் நிறைத்து அவர்கள் அனைவருக்கும் ஆறுதலையும், நிம்மதியையும் அளித்துக் காத்திட வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***உன்னதரான தந்தையே!***

*திருஅவையின் தூண்களாக வளர்ந்து வரும் எம் இளையோர்கள் உலகில் ஏற்படும் மாற்றங்களால் அவர்களின் நம்பிக்கைக்கும், விசுவாசத்திற்கும் அச்சுறுத்தலாக அமைந்து, அவை தரும் வாக்குறுதியால் தவறான பாதையில் போகாமல், உமது வாக்குறுதிகள் அவர்களின் வாழ்க்கைப் பாதைக்கு வழிக்காட்டி என்பதில் உறுதியோடு காத்திருக்கும் நல்லுள்ளத்தை அவர்களுக்குத் தந்தருள வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***விண்ணில் வாழ்பவராம் இறைவா,***

*எங்கள் குடும்பத்தினர்கள் அனைவரும் சாட்சிகளாக வார்த்தையால் மட்டுமல்ல, வாழ்க்கை மூலமாகவும் வெளிப்படுத்தவும், இயேசுவின் சிந்தனைகள், பணிவாழ்வு, இறுதி இலக்கு இவற்றை எமதாக்கி இருக்குமிடத்தில் விண்ணகத்தை உருவாக்கத் தேவையான நல்வரங்களைத் தர வேண்டுமென்று உயிர்த்த இயேசுவின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.*

***நிலைவாழ்வுத் தரும் ஊற்றாகிய எம் இறைவா!***

*கொரோனா வைரஸ் நோயால் பாதிக்கப்பட்ட உலக நாடுகளின் மக்களைக் கண்ணோக்கியருளும். அவர்கள் அனைவரும் விரைவில் குணமடையவும், இந்நோய் முற்றிலும் நீங்கிடவும், இத்தவக்காலத்தில் உம் மக்கள் அனைவரும் ஆலயம் சென்று, ஒன்றிணைந்துச் செபிக்கவும் தேவையான அருளை வழங்கிட இறைவா உம்மிடம் மன்றாடுகிறோம்.*